# தொல்காப்பியப் பாடாண்திணை - உரை ஒப்பீடு

# Tholkappiya Pādān Thinai – Commentary Comparison

**முனைவர் ச.தங்கமணி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –046.

**Dr S Thangamani**, Assistant Professor, Department of Tamil, Bharathiar University, Coimbatore – 046

DOI : 10.5281/zenodo.4662237

**Abstract**

In Tholkappiyam Contextual Chapter is particular Outernal department in part of pādān section and kinds of pādān is this case there are differences of opinion among the commentator of the concern authors. Therefore to find out the reason and differences of opinion through with commentator like Ilampuranar, Naccinarkkiniyar, Navalar Somasundara Bharathiar, K Vellaivaranar, S.Balasundaram, Soma Ilavarasu and A. Sivalinganar Theirs commentary work has been compared and brings out the acceptable textual opinions is the main objective of this research.

**Keywords:** தொல்காப்பியப் பாடாண் திணை, இலக்கணக் கருத்தாக்கம், உரையாசிரியரின் கருத்து முரண்பாடு, Tholkappiyam Pādān thinai, Commentary comparison, commentator differences

காலத்தால் முற்பட்ட பழமையான நூல் தொல்காப்பியம். அந்நூல் குறித்து முழுமையாக அறிந்துகொள்ள அவற்றின் மீதான உரைநூல்களே முக்கியப் பங்கு வகிக்கின்றன. இருப்பினும் இன்றுவரை அந்நூலுக்குப் பல்வேறு உரைநூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஏற்புரை, மறுப்புரை, மாற்றுரை என்ற தன்மைகளின் அடிப்படையில் உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரையெழுதியுள்ளனர். அவ்வுரை நூல்களுள் சில சூத்திரங்களுக்கான உரைகள் (குறிப்பிட்ட உரையாசிரியரின்) உரைக்கருத்தினை மறுத்துத் தம் கருத்துகளைத் தெற்றென மெய்ப்பிக்க உரிய கருத்துகளை, மறுப்புரையாக எழுதியும், சில உரையாசிரியரின் உரைக்கருத்திற்கு மாறாக வேறொரு மாற்றுரையை எழுதியும் வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு உரைகள் தோன்றுவதற்குக் காரணம், தொல்காப்பியம் எழுதப்பட்டுப் பல நூற்றாண்டுகள் கழித்து அதற்கு உரையெழுதியமையே. உரையாசிரியர்கள் தம் காலத்தில் நிலவிய மொழியமைப்புகளை மையமாகக் கொண்டே உரையெழுதியுள்ளனர். இதனால்தான் உரையாசிரியர்களிடையே கருத்து முரண்பாடுகள் உள்ள சில தொல்காப்பிய நூற்பாக்களுக்கு இன்றுவரை பொருத்தமான உரைகள் கிடைக்கப் பெறாமல் ஆய்வாளர்களின் விசாலமான எண்ண ஓட்டத்திற்கு இடம் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

இத்தகைய கருத்து முரண்பாடுகளுக்கு உட்படும் சில சூத்திரங்களுக்குத் தொல்காப்பியர் சொல்ல விழைகின்ற கருத்துகள் எவை என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. இக்கருத்து முரண்பாடுகளைக் களைய, தொல்காப்பியத்தின் உரைநூல்களை ஒப்பிட்டு, ஆய்ந்து கிடைக்கப்பெறும் ஏற்புடைய உரைக்கருத்துகளை முன்வைக்கும் நோக்கில் தொல்காப்பியப்

புறத்திணையியலின் பாடாண்திணை மட்டும் ஆய்வின் எல்லையாகக் கொண்டு ஒப்பீட்டின் அடிப்படையில் ஏற்புடைய உரைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**பாடாண்திணைப் பகுதி**

**'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே"  (தொல்.புறம்-20)**

கைக்கிளை, குறிப்பிட்ட ஒரு நிலத்திற்கு உரியதாக இல்லாமல் அனைத்து நிலங்களுக்கும் ஒருதலைக் காமமாகி வருவதைப் போல, பாடாண்திணையுள் ஒருவன் மற்றொருவனிடம் ஏதேனும் ஒரு பயனை எதிர்நோக்கி நிற்பதாலும், கைக்கிளை காமப்பகுதிக்கண் (உரியவரின்) உண்மைப்பெயர்க் கூறுவதைப் போல பாடாண்திணையிலும் உண்மைப்பெயர் கூறப்படும் கைக்கிளை போன்று பாடாண்திணையும் செந்திரமாகிய இன்பியல் பற்றிக் கூறப்படுவதாலும் கைக்கிளைக்குப் பாடாண்திணை புறனாயிற்று. அவற்றை ஆராயும் போது கடவுள் வாழ்த்துவகை, வாழ்த்தியல்வகை, மங்கலவகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படைவகை, பரிசிற்றுறைவகை, கைக்கிளைவகை, வசைவகை என எட்டு வகையினை உடையதாக வரும் என்கிறார் இளம்பூரணர்.

பாட்டுடைத் தலைவர், தம்மைப் போற்றிப் புகழ்வதை விரும்புகிறார். தலைவனைப் பாடும் புலவர், பரிசிலை விரும்புகிறார். இவ்வாறு இருதிறத்தாரும் ஒருதலைக் காமமாகிய கைக்கிளைப் போல இருவரது விருப்பமும் ஒத்திசையாது ஒன்றை மட்டுமே பற்றிய விருப்பமுடையவராயிருத்தலின் பாடாண்திணை கைக்கிளைக்குப் புறனாயிற்று என்றும் நாலிரண்டு உடைத்தே என்பதற்கு இளம்பூரணர் தரும் கருத்திலிருந்து மாறுபட்டக் கருத்தை முன்வைக்கின்றார். 'பாடாணென்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண் மகனையும் நோக்காது, அவனதொழுகலாறாகிய திணையுணர்த்தினமையின் வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின் அவை தம்மின் வேறாகிய ஒருதலைக் காமமாகிய கைக்கிளையோ டொத்திற் பாடாண்டிணை கைக்கிளைப் புறனாயிற்று. வெட்சி முதலிய திணைகளுஞ் சுட்டியொருவர் பெயர் கொடுத்துங் கொடாதும் பாடப்படுதலிற் பாடாண்திணையாயினும், ஒருவனை ஒன்று நச்சிக் கூறாமையின், அவர் பெறுபுகழ் பிறரை வேண்டிப் பெறுவதன்றித் தாமே தலைவராகப் பெறுதலின், அவை கைக்கிளைப் புறன் ஆகாமை உணர்க. இவ்விருகூறுந் தோன்றப் பகுதியென்றார். 'நாலிரண்டாவன' இப்பாடண்திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும், பொதுவியலும், வஞ்சியும் உழிஞையுந் தும்பையும் வாகையுங் காஞ்சியுமாகிய பொருள்கள் ஏழுமாகி எட்டுமாம்" இவ்வாறு உரையெழுதுகின்றார் நச்சினார்க்கினியர்.

பாடாண்திணை தனக்கெனத் தனிநிலை பெறாது வெட்சி முதலிய பிற திணைகளை நிலைக்களன்களாகக் கொண்டு வருவதால் பாடாண் பகுதி என்கிறார் சோமசுந்தர பாரதியார். வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண், உழிஞைப்பாடாண், தும்பைப்பாடாண், வாகைப்பாடாண், காஞ்சிப்பாடாண், புரைதீர் காமம் புல்லிய பாடாண், (நூற்பா-21 இல் வருவதையும் சேர்த்துக் கொள்கிறார்) என்ற ஏழு வகையிற் பாடாண் பிறக்கும் என்கிறார். அவற்றுள் அவ்வத் திணைப்பகுதி நீக்கிப் புகழ்ச்சிக்குரிய ஒவ்வொரு பகுதியே பாடாணாக விளங்க, அவற்றைப் பாடாண்பகுதி எனக் குறிப்பிடுகின்றார். ‘நாடுங்காலை’ என்பதற்குப் பாடாண் வகை ஒவ்வொன்றிலிருந்தும் அகத்திணைப் பகுதியை பிரித்துப் பாடாண் பகுதியை ஆராய வேண்டும் எனக் குறிப்புரைக்கிறார்.

‘நாலிரண்டு உடைத்தே’ என்பதற்குப் பாடாண் வகை என்கிறார். அவற்றை நூற்பா 29திலும் பாடாண் துறைகள் நூற்பா 30திலும் குறிப்பிடப்படுகிறது என்கிறார். நாலிரண்டுடைத்தே என்பதற்கு மேற்குறித்த ஏழு பாடாண் பகுதிகளுடன் செந்துறை வண்ணப் பகுதியையும் (நூற்பா-22) சேர்த்துப் பாடாண் பகுதி எட்டு என்ற தம் கருத்தை விளக்க, “தனக்கெனத் தனிநிலைபெறாத பாடாண்திணை பிறதிணைகளை நிலைக்களனாகக் கொண்டு ஏற்ற இடங்களில் ஒவ்வொன்றின் பகுதியே பாடாணாய் அமைவதால் பாடாண் பகுதி எனச் சுட்டப்பட்டது. அதாவது வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண், உழிஞைப்பாடாண் தும்பைப்பாடாண், வாகைப்பாடாண், காஞ்சிப்பாடாண், புரைதீர்காமம் புல்லிய பாடாண் என்றெழுவகையிற்பாடாண் பிறத்தலின், அந்தந்த திணைப்பகுதிகளை நீக்கிப் புகழ்ச்சிக்குரிய ஒவ்வொரு பகுதியே பாடாணாக விளங்க அவற்றைப் பாடாணின் வகையாக எண்ணாமல் பாடாண் பகுதி எனக் குறிப்பிடப்பட்டது.

பாடாண் திணை வகையைக் கொடுப்போரேத்தி என்ற நூற்பாவிலும் பாடாணின் துறைகள் தாவினல்லிசை என்ற நூற்பாவிலும் விளக்கப்படுவதாக உரையெழுதுகிறார்”. மேலும் நாலிரண்டாவது எட்டு எனுமென் துறைத்தொகையென நச்சினார்க்கினியர் குறிப்பிடுவது பொருந்தாது என மறுப்புரைத்துப் புறத்திணை ஆறும், அன்பின் ஐந்திணை கைக்கிளையாம் அகத்திணை இரண்டுமாகப் பாடாண் பிறக்கும் வகை எட்டென்று அமையும் என விளக்கமளிக்கிறார்.

க.வெள்ளைவாரணார் பாடாண் பிறக்கும் வகை எட்டினுள் புரைதீர் காமம் புல்லியவகை’ என்பதனுள் கைக்கிளையடங்கும் ஆதலால் பரவலும் புகழ்ச்சியுமாகிய செந்துறை வண்ணப் பகுதி இவ்வகையில் அடங்காது எனச் சோமசுந்தர பாரதியாரின் கருத்தை மறுத்து,

“பாடாண் திணை பாடுதல் வினை புலவர்பாலும், அவ்வினைக்கும் காரணமாகிய பண்பும், செயலும், பாட்டுடைத் தலைவன்பாலும் நிகழ்வன. வெட்சி முதலிய ஆறுதிணைகளும் தலைமக்களுக்குரிய பண்புகளையும் செயல்களையும் நிலைக்களனாகக் கொண்டு தோன்றும் தனிநிலைத் திணைகள். பாடாண் திணையோ தலைமக்கள்பால் நிகழும் மேற்கூறிய திணை நிகழ்ச்சிகளைத் தனக்கு நிலைக்களன்களாகக் கொண்டு தோன்றும் சார்புநிலைத் திணையாகும். போர்மறவர்பால் அமைவனவாகிய வெட்சி முதலிய புறத்திணைகளிலும் குற்றமற்ற

மனைவாழ்க்கையாகிய அகத்திணையிலும் அமைந்த செயல்களாய்த் தலைமக்களுக்குரிய கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதப் பண்புகளாய்ப் புலவராற் பாடுதற்கமைந்த ஒழுகலாறு பாடாண்திணையாகும் எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்".

“நல்லறிவுடைய புலமைச் செல்வர் பலரது உரையினாலும் பாட்டினாலும் உயர்த்துப் புகழும் வண்ணம் ஆற்றல்மிக்கப் போர்த்துறையிலும் அன்பின்மிக்க மனைவாழ்க்கையிலும் புகழுடன் வாழும் நன்மக்களது பண்பின் ஆளுதற் தன்மையே பாடாண்திணை எனல் பொருத்தமுடையது” என்கிறார்.

“பாடாண்திணையின் வகைகுறித்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றோரின் கருத்துகளை மறுத்து ‘நாலிரண்டுடைத்தே எனக் குறித்த தொல்காப்பியர் தாம் சுட்டிய நாலிருவகையினையும் இவையென அடுத்துவரும் நூற்பாக்களில் விரித்துக் கூறியுள்ளார் எனக் கொள்ளுதலே தொல்காப்பியச் சூத்திரத்தின் போக்கிற்கு ஏற்புடையதாகும்” என்கிறார் வெள்ளைவாரணார்.

“வாகைத்திணையைப் போல இதுவும் பிறதிணைகளின் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்தலான் அதுபோலவே இதுவும் வகைப்பட்டு நிற்கும் என்பது விளக்கப் பாடாண்பகுதி என்றார். அவ்வகைமைகளை ஆராய்ந்து உணர்தல் வேண்டுமென்பார் அமரர்கண் முடியும் அறுவகை, புரைதீர்காமம் புல்லியவகை என்பதானும் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் முன்னோர் கூறிய குறிப்பினும் என்பதனானும் அறிந்துகொள்க” என்கிறார் ச.பாலசுந்தரம்.

கைக்கிளையிற் காதற்சிறப்பு ஒருவருக்கேயாவது போலப் பாடாண் சிறப்பும் பொதுமையின்றித் தகவுடையார் ஒருவருக்கே உரியதாக வருவதாலும் கைக்கிளையில் காதற் கூற்றுகளில் பாராட்டும் தலைவன்பால் அமைவது போல் பாடாண் கூற்றும் புகழ்வோர்தம் விருப்பத்தினால் அமைவதனாலும் இரண்டிற்கும் நிலம் பொழுது என்ற வரையறை இல்லாததாலும் கைக்கிளையின் இழுக்கு நீக்கி ‘தருக்கியவே’ சொல்லி இன்புறுவதைப் போலப் பாடாணில் பழியில்லாத புகழ்ச்சி ஒன்றையே கொண்டிருப்பதால் பாடாண் கைக்கிளைக்குப் புறனாயிற்று என்று விளக்குகிறார் சோம இளவரசு.

வெட்சி முதல் வாகையீறாகவுள்ள திணைகள் போர் தொடுப்போருக்கும் அவற்றை எதிர்ப்போருக்கும் உரியவை. காஞ்சி அனைவருக்கும் உரியவை போல இல்லாமல் பாடாண்திணை பாடப்படுபவர், பாடுபவர் எனும் இருவருள் பாடுவோரின் விருப்பம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொள்வதால் வெட்சிதானே காஞ்சிதானே எனக் கூறாமல் பாடாண் பகுதி எனவும் நாலிரண்டாவன’ என்பதற்கு அமரர்கண் முடியும் அறுவகை, புரைதீர் காமம் புல்லிய வகை, பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கும் முன்னோர் கூறிய குறிப்பும் தரும் செந்துறை வண்ணப் பகுதி, கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயத்தல், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிரும்

மானிடப் பெண்டிர் மாட்டுக் கடவுளரும் நயத்தல், குழவி மருங்கின் காமப் பகுதி, ஊரொடு தோற்றம், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவன எல்லாம் அடங்கும் என விளக்குகிறார்.

'நாலிரண்டாவன' என்பதற்கு கொடுப்போர் ஏத்திக் கொடார் பழித்தல் என்பதிலுள்ள ஏத்துதலைப் புகழ்ச்சிவகை, பழித்தலை வசைவகை எனக் கொண்டால் இவற்றுள் புகழ்ச்சி வகை விடுத்தலாகாது. எனவே இளம்பூரணர் கருத்து ஏற்புடையதாகாது. பொதுவியற்பாடாண் என்ற ஒன்று இல்லாததால் அவை வெட்சிப் பாடாணிலேயே அடங்கும் என்பதினால் நச்சினார்க்கினியரின் கருத்து ஏற்புடையதன்று.

நூற்பா 29 இல் 'கொடுப்போர் ஏத்தி' முதல் 'விளக்கு நிலை' வரையுள்ள ஏழும் வாயுறை வாழ்த்து முதல் கைக்கிளை வரையுள்ள நான்கையும் சேர்த்து ஒன்றும் ஆக எட்டு என்கிறார் சோமசுந்தர பாரதியார். ஆனால் வாயுறைவாழ்த்து முதலிய நான்கும் தனித்தனித் துறைகளாக விளங்க அவற்றை ஒன்றென்று கூறுதல் ஏற்புடையதன்று.

அமரர்கண் முடியும் அறுவகை, புரைதீர் காமம் புல்லிய வகை, பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கு முன்னோர் கூறிய குறிப்பு ஆக எட்டு என்றக் கருத்தை முன்வைத்த வெள்ளைவாரணார், ச.பாலசுந்தரம் ஆகியோரின் கருத்து ஏற்புடையதன்று. ஏனெனில் அமரர்கண் முடியும் 'அறுவகையுடன் மற்றைய மூன்றையும் கூட்ட' என்பதற்குப் பரவல் புகழ்ச்சி குறிப்பு ஆகியவற்றைச் செந்துறை வண்ணப் பகுதியில் அடக்கினால் அமரர்கண் முடியும் அறுவகையும் ஒன்றாக அமையும் என்பதால் இக்கருத்தும் ஏற்புடையதன்று.

**"அமரர்கண் முடியும் அறுவகை யானும்**
**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**
**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப"** (தொல்.புறம்-21)

அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் எனத் தேவர்கண்ணேவந்து முடியும் இவ்வறுவகைகளிலும், குற்றந் தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும் அமைந்த பாடல்களில் முறையே தெய்வவாழ்த்துப் பகுதியும் அகப்பொருட்பகுதியும் இடம்பெறுதல் இயல்பாதலின் அப்பொருட் பகுதிக்கு வேறாகப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வரும் ஒருபகுதியே இங்குப் பாடாண்திணையதற்குப் பொருந்தும். புணர்தல் முதலாகிய ஐவகை உரிப்பொருளினும் ஊடற்பொருண்மை பாடாண்பகுதிக்குப் பொருந்தும் என்பதும், ஒன்றன் பகுதி என்ற இதனானே இயற்பெயர் சாத்திவாராது பாட்டுடைத் தலைவனது நாடும் ஊரும் இதுவென விளங்க ஊரன் சேர்ப்பன் என்னும் பெயரினால் காமக் குறிப்புபற்றி வரும் ஒரு கூறும் பாடாண் பாட்டாகும் என விளக்கமளிக்கிறார் இளம்பூரணர்.

அமரர்கண் முடியும் அறுவகை என்பது பிறப்பு முறையால் சிறந்த அமரர் என்பது வேறு, சிறப்பு வகையால் அமரர் சாதியுட் சேர்த்துரைக்கப்படும் அறுவகையாகி முனிவர், பார்ப்பார். ஆநிரை, மழை, முடியுடைவேந்தர், உலகு என்பன வேறு என விளக்குகிறார். இவ்வாறாக

இளம்பூரணர் முன்வைக்கும் உரைக்கருத்துகளிலிருந்து மாறுபட்ட உரையைத் தருகின்றார் நச்சினார்க்கினியர். இவற்றுக்கு, "பிறப்பு வகையானன்றிச் சிறப்பு வகையால் தேவர்கண்ணே வந்து முடிதலுடையவாகிய அறுமுறை வாழ்த்தின் கண்ணும், அத்தேவரிடத்தே உயர்ச்சி நீங்கிய பொருள்களை வேண்டுங் குறிப்புப் பொருந்தின பகுதிக் கண்ணும் மேற் பாடாண் பகுதியெனப் பகுத்து வாங்கிக் கொண்ட ஒன்றனுள் தேவர், மக்கள் எனப் பகுத்த இரண்டனுள் தேவர்க்கு உரித்தான பகுதியெல்லாம் தொக்கு ஒருங்குவருமென்று கூறுவர் ஆசிரியர் என உரை எழுதுகிறார். ஆனால் பார்ப்பன வாழ்த்தும், முடியுடைவேந்தர் வாழ்த்தும் இயன்மொழிவாழ்த்துள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

"போர் மறவர்பாற் சென்றமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சியீறான புறத்திணை வாகையாறினும் (புரைதீர்க்காமம் புல்லிய வகையினும்) குற்றமற்ற அகப்பகுதியில் அன்பளைந்த காதல் திணைவகையினும் அவ்வெழுவகைத் திணைகளுள் இயல்பாக இதற்கேற்புடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணாய் அமையும் என்று கூறுவர் புறநூற்புலவர்" என விளக்குகிறார் சோமசுந்தர பாரதியார். அதாவது போர் மறவர்களுக்கு உரியதாக அமையும் இப்புறத்திணையியலில் விரிவாகக் கூறப்பட்ட வெட்சி முதல் காஞ்சி ஈறான புறத்திணையொழுகலாறுகள் ஆறினையும் பொருளாகக் கொண்டு பாடப்பெறுவதால் அமரர்கண் முடியும் அறுவகை என்று விளக்கியுள்ளார்.

"சோமசுந்தர பாரதியாரின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு, அக்கருத்துகளே தொல்காப்பியனார் கருத்துக்கும் சங்கட் செய்யுட்களின் திணை துறையமைப்புக்கும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது என விளக்கமளிக்கின்றார் க. வெள்ளைவாரணார்.

"அமரர் கண்ணவாய் முடியும் வெட்சி முதலாய அறுவகைப் பற்றி நிகழும் ஒழுகலாற்றின்பாலும் குற்றந்தீர்ந்த காமக்கூட்டம் பற்றி நிகழும் ஒழுகலாற்றின்பாலும் ஒருகூறு பாடாண்திணையாக் கிளத்தற்கும் பொருந்தும் எனக் கூறுவர் நூலோர்" என்கிறார் ச.பாலசுந்தரம்.

அமரர்கண் முடியும் அறுவகையானும் போர் மறவப்பாற் சென்றமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சியீறான புறத்திணைவகை ஆறினும் குற்றமற்ற அகப்பகுதியில் அன்பளைந்த காதல் திணைவகையினும் ஒன்றன் பகுதி ஒன்றும் என்பதுபட அவ்வெழுவகைத் திணைகளுள் இயல்பாக இதற்கேயுடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணாய் அமையும் என்று கூறுவர் புலவர் என உரையெழுதுகிறார் சோம இளவரசு.

அமரர்கண் முடியும் அறுவகை என்பதற்கு அமர் - விருப்பம், அவர்கண் முடிதலாவது போரில் எதிர்த்து வீரங்காட்டி வீழ்ந்த வீரர்களுகுத் தெய்வமாகக் கல்லெடுத்தலாம். அமர் - போர், அமரர் - போர் வீரர். வீரர்கண் முடியும் அறுவகை நிலையும் தெய்வ நிலையாம். அறுவகையாவன காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்பன. இவையெல்லாத் திணை வீரர்க்கும் உரியன என விளக்குகிறார் சிவலிங்கனார்.

**“வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்**
**பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்**
**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**
**வண்ணப் பகுதி வரைவின் றாங்கே”** **(தொல்.புறம்-22)**

“மேற்சொல்லப்பட்டன வழக்கு இயலும் பக்கத்து வகைபெற நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்தினும், நூலாசிரியர் கூறிய காமக்குறிப்பினும், செந்துறைப்பாட்டின் கண்வரும் வண்ணப்பகுதி வரைதல் இல்லை அவ்விடத்து என உரை எழுதுகிறார் இளம்பூரணர். முன்னோர் கூறிய குறிப்பு என்பது காமக்குறிப்பு. ‘காமப்பகுதி கடவுளும் வரையார்’ என்று குறிப்பிடப்படுகிறது. தெய்வத்தை முன்னிலையாக்கிப் பாடும் தேவப்பாணியும் அகப்பொருள் பாடும் பாட்டும் இசைத்தமிழில் இந்த இந்தச் செய்யுளிற் பாடப்படும் எனச் செய்யுளியலில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இங்கு செந்துறை பாட்டிற்கு உரிய செய்யுள் இவை எனத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறாமையால் செந்துறைப் பாடாண் பாட்டிற்கு எல்லாச் செய்யுளுமாம் எனக் கூறி புகழ்தல் படர்க்கைக் கண்ணும் பரவல் முன்னிலைக் கண்ணும் பாடப்பெறும் எனப் பகுத்து விளக்குகின்றார்.

“பரவலும் புகழ்ச்சியும் அவ்வப் பொருண்மை கருதினாரைத் தலைவராக வுடைமையானும், ஏனையது அக்குறிப்பிற்றன் றாகலானும், அதற்குப் பாட்டுடைத் தலைவர் பலராயினும் ஒருவராயினும், பெயர் கொடுத்துங் கொடாதுங் கூறலானும் வேறு வைத்தாரென்க. இத்துணை வேறுபாடுடையதனைப் பரவல் புகழ்ச்சியோடு கூட வைத்தார். அவை முன்னோர் கூறிய குறிப்பினுள்ளும் விராய் வரும் என்றற்கு இன்னும் அதனானே பாடாண்டிணைப் பொருண்மை மயங்கிவரினும் முடிந்த பொருளாற் பெயர்பெறுமென்று கொள்க” என்கிறார் நச்சினார்க்கினியர். ஒரு தலைவன் தன்னைப் பிறர் வாழ்த்துதலும் புகழ்ந்துரைத்தலும் கருதியவிடத்து அறம் பொருள் இன்பம் போன்றவற்றின் கூறுபாடு தோன்ற முன்னுள்ளோர் கூறிய குறிப்புப் பொருளின்கண்ணும் பரவுதலும் புகழ்ச்சியும் நிலைபெற்று வழங்கக்கூடிய இடங்களிலெல்லாம் செந்துறைக்கண் வருணங்களின் கூறுபாடு வருவதை நீக்குதல் நிலைமையில்லை என்று எடுத்துரைக்கிறார். வண்ணம் என்ற தமிழ்ச்சொல்லுக்கு வருணம் என்ற வடசொற் பொருளை ஏற்றியுரைக்கிறார். அத்துடன் புனைந்துரை வகையால் மிகைபட உயர்த்திப் புகழாது ஒருவரிடம் இயல்பாய் அமைந்த நலன்களை இசைப்படப் புகழ்ந்து பாடுதலே பாடாண்பாட்டு என்கிறார்.

வருணம் என்ற வடசொல்லால் குறிக்கப்படும் சாதி வேறுபாட்டினை வண்ணம் என்னும் தமிழ்ச்சொல்லுக்குரிய பொருளாகக் கொள்ளும் நச்சினார்க்கினியரின் கருத்தை மறுத்து “பல திணைப்பகுதிகள் பாடாணாய்ப் பயிலுமிடத்து அதனதன் கூறுபட நின்று, வாழ்த்தலும் புகழ்தலும் நுதலுமிடத்தும் பண்டைச் சான்றோர் செந்துறை வழக்குச் சுட்டும் பிறவிடத்தும் இயற்பாக்களேயன்றி இசைவகை வண்ணக் கூறுகளும் விலக்கப்படா” என உரையெழுதுகிறார் சோமசுந்தர பாரதியார்.

பாடாண்திணை பற்றிய பகுதிகளுள் மேலை நூற்பாவிற் குறித்த அமரர்கண் முடியும் அறுவகைகளினும் புரைதீர்காமம் புல்லிய வகையினும் அடங்காமல் மக்களை இயல்புவகையால் போற்றிப் பரவும், பாடற்பகுதி, செந்துறை வண்ணப்பகுதி எனப் பாடாண் திணையின் எட்டாம் பகுதியாகக் கொள்ளப்படும் என்பதும் மக்களைப் படர்க்கையிலும் முன்னிலையினும் வைத்துப் பாராட்டுவதும் முன்னோர் அறம் பொருளின்பமாகிய நற்பொருள்களை மக்கட்குலத்தார்க்கு அறிவுறுத்துவதுமாகத் தன்னியல்பில் நிகழும் இருதிறங்களும் செந்துறை வண்ணப்பகுதி என ஒரு பகுதியாய்ப் பாடாண்திணையுள் எட்டாம் பகுதியாக வரைவின்றிக் கொள்ளப்படும் என்கிறார் க. வெள்ளைவாரணார்.

“மேற்கூறிய ஏழுவகைப் பாடாண்பகுதிக்கண் பாடாண்டிணை யாதற்குரிய தலைமக்களது ஆளுமைப் பண்புகளை இருவகை வழக்கினும் பயின்று வரும் பக்கத்தான் வகைபட நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியுமாக அவற்றைக் கருதிக் கூறுமிடத்தும் அறநெறி முறைமையாக முன்னோர் கூறிய உறுதிப்பொருளைக் குறித்துக் கூறுமிடத்தும் செந்துறையாக வண்ணித்துக்கூறும் வண்ணப்பகுதி நீக்கப்படும் நிலைமையில்லை எனக் கூறுவர் நூலோர்”; என உரையெழுதுகிறார் ச.பாலசுந்தரம்.

பல, பிறதிணைப் பகுதிகள் பாடாணாய்ப் பயிலுமிடத்து அதனதன் கூறு நின்று வாழ்த்தலும் புகழ்தலும் நிகழுமிடத்து பண்டையச் சான்றோர் செந்துறை வழக்குச் சுட்டும் பிறவிடங்களிலும் இயற்பாக்களேயன்றி இசைவகை வண்ணக் கூறுகளும் விலக்கப்படுவதில்லை என விளக்குகிறார் சோமஇளவரசு.

**நிறைவுரை**

மேற்கண்ட உரை ஒப்பீடுகளின் அடிப்படையில் பாடாண் பகுதி, பாடாண் வகை என்ற இரண்டிற்கும் உரையாசிரியர்களிடையே முரண்பட்ட கருத்துகளைக் காணமுடிகிறது. நாலிரண்டுடைத்தே என்பதற்கு இளம்பூரணர் கடவுள் வாழ்த்து முதல் வசைவகை வரை எட்டு என்கிறார். நச்சினார்க்கினியரோ இப்பாடாண்திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்று, இருவகை வெட்சி, பொதுவியல், வஞ்சி முதல் காஞ்சி வரை ஐந்து என மொத்தம் எட்டு என்கிறார். இவற்றில் பொதுவியல்பாடாண் என்ற ஒன்று இல்லாததைக் புதிதாகக் கூறுகின்றார். சோமசுந்தர பாரதியோ புறத்திணை ஆறும், அன்பின் ஐந்திணையாம் அகத்திணை இரண்டுமாகப் பாடாண் பிறக்கும் வகை எட்டு என்றும் உரையாசிரியர்கள் பாடாணின் வகைகளாக நூற்பா-29,30 விளக்கப்படுவதாக உரையெழுதுகிறார். ஆனால் ‘கொடுப்போர் ஏத்தி’ முதல் ‘விளக்கு நிலை’ வரையுள்ள ஏழும் வாயுறை வாழ்த்து முதல் கைக்கிளை வரையுள்ள நான்கையும் சேர்த்து ஒன்றும் ஆக எட்டு என்கிறார் சோமசுந்தர பாரதியார். ஆனால் வாயுறைவாழ்த்து முதலிய நான்கும் தனித்தனித் துறைகளாக விளங்க அவற்றை ஒன்றென்று கூறுதல் ஏற்புடையதன்று. வெள்ளைவாரணார் சோமசுந்தர பாரதியாரின் கருத்துகளையே ஏற்கிறார். ஆனால் பாடாண்திணையின் வகை என்பதற்கு சிவலிங்கனாரின் கருத்து ஏற்புடையதாக இருக்கின்றது.

ஏனெனில் நாலிரண்டுடைத்தே எனக் குறித்த தொல்காப்பியர் தாம்சுட்டிய நாலிரு வகையினையும் இவை இவையென அடுத்து அடுத்து வரும் நூற்பாக்களில் விரித்துக்கூறியுள்ளார் எனக் கொள்ளுதலே தொல்காப்பிய நூற்பா போக்கிற்கு ஏற்புடையதாகும். அவ்வகையில் 'பாடாண் பகுதி ' என்ற நூற்பாவுக்குப் பின்னுள்ள நூற்பாக்கள் - 21, 22, 23, 24, 25, 26 என்ற ஆறிலும் காணப்படும் எட்டு வகைகளே பொருத்தமுடையதாக உள்ளது.

**துணைநூற் பட்டியல்**

1. சிவலிங்கனார்.ஆ. (2015-மீள்பதிப்பு), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) புறத்திணையியல் பகுதி – 2, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. பாலசுந்தரம்.ச. (உ.ஆ), (2012), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (தொகுதி -3, பகுதி -1) ஆராய்ச்சிக் காண்டிகையுரை, (பதி-ஆ) மாதையன்.பெ, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

3. வெள்ளைவாரணன்.க (1983) தொல்காப்பியம் - பொருளதிகாரம் புறத்திணையியல் (உரைவளம்) மதுரைகாமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

## References

1. Sivalinganar A (2015 Re Edition), Tholkapppiyam – Porulathikaram (Uraivalam), Purathiniaiyiyal Part -2, Ulaga Thamizh Araychi Niruvanam, Chennai.
2. Balasundram S (C.A), (2012), Tholkappiyam – Porulathikaram ( Vol -3 Part -1) Araychi Kandikaiyurai, (Editor)) Mathaiyan.P Periyar University, Salem.
3. Vellaivaranan K (1983) Tholkappiyam – Porulathikaram Purathinaiyiyal (Uraivalam), Madurai Kamarasar University, Madurai

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**தங்கமணி, ச. " தொல்காப்பியப் பாடாண்திணை - உரை ஒப்பீடு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 1, ஏப்ரல் 2021, பக். 01-09

## Cite this Article in English

**Thangamani, S. " Tholkappiya Pādān Thinai – Commentary Comparison "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 1, April 2021, pp. 01-09